தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19-12-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண்மை அறிவியல் நிலையம், தருமபுரியில் பசுமைக் குடில் அமைக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் போராக் (இந்தியா) புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் போராக் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனம் , மும்பை இடையே ‘பசுமைக்குடில் தொழில்நுட்ப மாதிரி’ யை தருமபுரி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் 18.12.2018 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர். நீ.குமார் அவர்களின் முன்னிலையில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் டி.சுதாகர் மற்றும் போராக் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துணைத்தலைவர் அனில் கிருஷ்ணா இருவரும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தருமபுரி மாவட்டத்தில், அப்பகுதிக்கேற்ற பாதுகாக்கப்பட்ட முறை மலர் மட்டும் காய்கறி சாகுபடிக்கான மாதிரியை போராக் நிறுவன உதவியுடன் வேளாண்மை விரிவாக்க இயக்குனரகம் தருமபுரி வேளாண்மை அறிவியல் நிலையம் செயல்படுத்தும் உயர் மதிப்பு தோட்டக்கலை விளைபொருட்களான சாமந்தி, ஜெர்பரா, குடைமிளகாய், வெள்ளரி போன்றவற்றின் உயர் சாகுபடி தொழில்நுட்பங்களின் மாதியாக இந்த ‘பசுமைக்குடில் மாதிரி’ திகழும். இந்த பசுமைக்குடில் மாதிரி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்கு பயன்படுத்தப்படும்.

வேளாண்மை விரிவாக்க இயக்குநர் முனைவர் ஹெ.பிலிப் அவர்கள் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துதலில் முதன்மை வழிகாட்டியாக திகழ்ந்தார் இந்நிகழ்வில் முனைவர் ம. செந்தில்குமார், முனைவர் பா.ச. சண்முகம் மற்றும் முனைவர் க. இந்துமதி ஆகியோர் பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்